1987 மே 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த கள்ளர் சீரமைப்பு விடுதிகள் வாடகைக் கட்டிடத்தில்தான் இயங்கி வருகின்றன. அங்கு சௌகரியம் இல்லாத நிலையில் மாணவர்கள் கஷ்டப்படும் சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இவற்றைக் கருத்தில் கொண்டு இந்த வருடமாவது தனிப்பட்ட முறையிலே கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விடுதிகள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. அப்போது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. பிரேம்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல், இலங்கைப் பகுதியிலிருந்து துளுவ நாட்டிலிருந்து துளுவ வெள்ளாளர் என்ற ஒரு வகுப்பினர் இங்கே தமிழகத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற பொருட்டு, அவர்களை, 'மோஸ்ட் பேக்வேர்டு கிளாஸ்' லிஸ்டிலே சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, துளுவ வெள்ளாளர்கள் இலங்கைப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று சொல்வதை மாற்றிக் கொள்ளவேண்டும். தமிழகத்திலே இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். மிக பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்ப்பது இப்போது இயலாத காரியம். (இப்போது அதற்குச் சட்டம் இல்லை).

அருப்புக்கோட்டை தொகுதி, கல்லூரணியிலுள்ள பிற்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதி.

615—(*வினா எண் 12330) **திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, கல்லூரணியில் உள்ள பிற்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதியினை நார்த்தம் பட்டிக்கு மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அருப்புக்கோட்டை தொகுதி கல்லூரணியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதி ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி கல்லூரணியில் இருக்கின்ற அந்த பிற்பட்டோர் நல மாணவர் இல்லம்—நார்த்தம்பட்டி முத்துராமலிங்கபுரத்தில் ஒரு மேல்நிலைப்பள்ளி இருக்கிறது–அங்கே படிக்கின்ற மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வாய்ப்பு வசதி இல்லாமல் இருக்கிறது. கல்லூரணியில் ஒரு மானெஜ்மென்ட் மாணவர் இல்லம் இருக்கின்றது. ஆகவே, தயைகூர்ந்து அரசு அந்த நார்த்தம்பட்டிக்கு அந்த மாணவர் இல்லத்தை மாற்றிக் கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நார்த்தம்பட்டி என்ற கிராமத்தைச் சுற்றி ஆதி திராவிட மாணவர் விடுதியும், பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற இடத்தில் அதை இப்போது மாற்றுவதற்கு அரசிடம் யோசனை இல்லை.

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று, அருப்புக்கோட்டைத் தொகுதியில் இருக்கின்ற மல்லாங்கிணறு, காரியாபட்டி, நரிக்குடி, திருச்சுளி ஆகிய இடங்களில் இருக்கின்ற மாணவர் இல்லங்களில் இடம் போதாத காரணத்தால், அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிருபைகூர்ந்து கூடுதலாக அந்தப் பகுதி மக்கள், பிற்பட்ட பகுதி மக்கள் படிப்பதற்கு உதவியை செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற மாணவர் எண்ணிக்கையைப் பார்த்தும், பிற்படுத்தப்பட்ட மாணவர் எண்ணிக்கையப்பார்த்தும் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அருப்புக்கோட்டைத்தொகுதி கல்லூரணியில் இருக்கக் கூடிய பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதியை நார்த்தம் பட்டிக்கு மாற்றச் சொல்லி கோரிக்கை வந்திருக்கிறது. கல்லூரணியிலிருந்து நார்த்தம்பட்டி 100 கெஜம் தூரத்தில்தான் இருக்கிறது. கல்லூரணியில் இருப்பதை ஏன் மாற்றவேண்டும் என்று இந்தக் கேள்வி வந்தது என்பதை அறியவிரும்புகிறேன்.

1987 மே 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைப் போட்டது பற்றி நான் பதில் சொல்வதற்கில்லை. கேள்வி கேட்கிறார்கள். ஆனால் நார்த்தம்பட்டியிலேயே ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி துவக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

கோவை மாவட்டம், வாலங்குளம் பகுதியிலுள்ள குடிசைவாசிகள்.

616—(*வினா எண். 8224) திரு. ஆ. நடராசன், திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம், வாலங்குளம் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடிசைவாசிகள் தற்போது எங்கே குடியமர்த்தப்பட்டு உள்ளார்கள் ?

(ஆ) எத்தனைக் குடும்பங்கள் இவ்வாறு மாற்றப்பட்டன ?

(இ) அவர்களுக்கு அரசு அளித்துள்ள நிவாரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோவை மாநகரம், வாலங்குளம் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட குடிசைவாசிகள் கோயமுத்தூர் வட்டம், மதுக்கரை அருகாமையில் கருணாபுரம் என்னுமிடத்தில் தற்போது குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) 477 குடும்பங்கள் அவ்வாறு குடியமர்த்தப்பட்டுள்ளன.

(இ) ஆக்கிரமிப்புதாரர்கள் வெளியேற்றம் செய்து கருணாபுரத்தில் குடியமர்த்தப்பட்டனர். அவர்களது குடியமர்த்தும் மறுவாழ்விற்காக ஒரு குடிசைக்கு ரூ. 500 வீதம் 477 குடிசைகளுக்கு மொத்தமாக ரூ. 2,38,500 சேரன் போக்குவரத்துக் கழகத்தினரால் வழங்கப்பட்டது. ரூ. 15,000 செலவில் ஆழ் நீர் குடிதண்ணீர் குழாயும் அமைத்து தரப்பட்டது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடியமர்த்தப்பட்ட குடிசைவாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. சேரன் போக்குவரத்துக் கழகப் பணி மனைக்காக